



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓ DIGITAL MARKETING
✓ WEB DEVELOPMENT
✓ SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 286 | 09.04.2026 | THURSDAY | PANGUNI: 26 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 286 | 09.04.2026 | வியாழக்கிழமை | பங்குனி : 26 | விலை : ரூ.5/-


## தலைமைச் செயலர் மாற்றம்

# "அத்துமீறிய அரசியல் நடவடிக்கை"

## தேர்தல் ஆணையத்துக்கு ஸ்டாலின் கண்டனம்

சென்னை: ஏப்.9-

தேர்தல் ஆணையம் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரை மாற்றி, ஒருதலைப்பட்சமான அத்துமீறிய அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக முதல்வர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "பாஜகவை ஆதரித்து நேரில் பரப்புரை செய்ய களத்திற்கு வராத குறையாகத் தேர்தல் களத்தில் முழுமூச்சுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தேர்தல் ஆணையம், இப்போது தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரை மாற்றி, ஒருதலைப்பட்சமான அத்துமீறிய அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதற்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நியாயமான சுதந்திரமான தேர்தலை நடத்த வேண்டிய தேர்தல் ஆணையம், பாஜக ஆட்சியில் அக்கட்சியின் கட்டளைகளை நிறைவேற்றி வருவது வெட்கக்கேடானது. அரசியல்சட்டம் தேர்தல் ஆணையத்திற்குத் தந்துள்ள பாதுகாப்பு பாஜகவுக்குத் தேர்தல் வேலை பார்ப்பதற்கு அல்ல. நாட்டை சர்வாதிகாரப் பாதையில் கொண்டு செல்லத் துடிக்கும் பாஜக ஆட்சியில் ஆதிக்க மனப்பான்மையுடன் பணியாற்றும் தேர்தல் ஆணையம் இதனை உணராமல் இருப்பது, ஆணையத்தின் கண்ணியத்தைக் கடைத்தெருவில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

பாஜக ஆளும் அசாம் மாநிலத்தில் தேர்தல் நடக்கிறது. அங்கு டிஜிபி, தலைமைச் செயலாளரை மாற்றவில்லை. பாஜக பிராக்சி ஆட்சி நடத்திய பிஹார் மாநிலத்தில் தேர்தல் நடைபெற்றது. அங்கும் டிஜிபி, தலைமைச் செயலாளரை மாற்றவில்லை. தமிழ்நாட்டில் மட்டும் தலைமைச் செயலாளர், டிஜிபி ஆகியோர் ஆகியோர் தேர்தல் ஆணையத்தின் கண்ணை உறுத்தியிருக்கிறார்கள். அவர்களை பாஜகவின் தூண்டுதலில் மாற்றியிருக்கிறது.

தமிழ்நாட்டில் பாஜக, அதிமுகவுடன் கைகோத்து நடத்த இருக்கும் தேர்தல் முறைகேடுகளுக்குத் துணை போகத் துடியாய்த் துடிப்பது தேர்தல் ஆணையத்திற்கு அழகு அல்ல. ஆணையத்தின் அலுவலர்கள் இன்று இருக்கலாம். நாளை பதவியிலிருந்து போய் விடலாம். ஆனால் நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நம் அரசியல்சட்ட முன்னோர்களால் உருவாக்கப்பட்ட தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமை நடுத்தெருவில் கொண்டு வந்து நிறுத்தப்படுவது நம் நாட்டிற்கும் சுதந்திரமான நியாயமான தேர்தலுக்கும் பேராபத்து.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மீறி, தலைமைத் தேர்தல் ஆணையரை நானே தேர்வு செய்வேன் என்று புதிய சட்டத் திருத்தம் கொண்டு வந்த பிரதமர் அவர்களுக்கோ அல்லது அவர் வழிநடத்தும் ஒன்றிய பாஜக அரசுக்கோ தேர்தல் ஆணையத்தின் புனித்தன்மை புரியப் போவதில்லை என்பதைத் தமிழ்நாடு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மட்டும் 'தலைமைச் செயலாளர்', 'டிஜிபி' ஆகியோரை மாற்ற பாஜக தூண்டி விடும் காட்டு தர்பார் பிரதிபலிக்கிறது. ஜனநாயகத்தின் கடைசி நம்பிக்கையாக இருக்கும் தேர்தல் ஆணையமும் காவிமயமாகி விட்டது என்பதையே இந்த நடவடிக்கைகள் எல்லாம் காட்டுகின்றன.

எத்தனை அதிகாரிகளை மாற்றினாலும் தமிழ்நாட்டில் பாஜக படுதோல்வியில் மண்ணைக் கவ்வப் போவது உறுதி. சீப்பை ஒளித்து வைத்து விட்டால் திருமணத்தை நிறுத்திவிடலாம் என்பது போல் அதிமுக பா.ஜ.க. அடங்கிய என்டிஏ கூட்டணிக்காகத் தேர்தல் ஆணையம் செய்யும் அதிகார அத்துமீறல் ஆணவத்தின் உச்சகட்டம்!" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "குடும்ப ஆட்சி, வாரிசு அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைப்போம்" சென்னையில் இபிஎஸ் பிரச்சாரம்



சென்னை: ஏப்.9-

"குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல் இந்த நாட்டுக்கு தேவையா? வரவிருக்கும் தேர்தலில் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

சென்னைசைதாப் பேட்டையில் அமமுக வேட்பாளரை ஆதரித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் செய்தார். இது குறித்து அவர் பேசும்போது, "திமுக ஆட்சியில் விலைவாசி கடுமையாக அதிகரித்துள்ளது. இந்த ஆட்சி தொடர வேண்டுமா?

திமுக குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்படுகிறது. அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் 'யார் அந்த சார்?' என கண்டுபிடிக்கப்படும். திமுக ஆட்சியில் தரமான வடிகால் வசதி செய்யப்படவில்லை. அதனால்தான் சென்னை மக்கள் மழைக்காலங்களில் கடுமையாக பாதிக்கப் படுகிறார்கள். ஊழல் செய்வதுதான் திமுகவின் முதன்மையான வேலையாக இருக்கிறது.

திமுக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதா? நான்கில் ஒரு பங்கு வாக்குறுதிதான் நிறைவேற்றப்பட்டுள்ளது. கல்விக் கடன் ரத்து செய்யப்படவில்லை. காஸ் சிலிண்டருக்கு மானியம் வழங்கப்படவில்லை. ரேசன் கடைகளில் ஒரு கிலோ சர்க்கரை அதிகமாக போடுவதாகச் சொன்னார்களே போட்டார்களே?

தமிழகத்தில் கஞ்சா புழக்கம் அதிகரித்துள்ளது. கஞ்சா விற்பவர்களுக்கு திமுக அரசே துணை நிற்கிறது. மொத்தத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. அதிமுகவில் கொண்டுவரப்பட்ட திட்டங்களை திமுக நிறுத்தி வைத்திருக்கிறது. அதிமுக ஆட்சி அமைந்தவுடன் 3 மாதங்களில் கஞ்சா ஒழிக்கப்படும். மின்கட்டணம் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது.

வீட்டுவரி உயர்த்தப் பட்டுள்ளது. நாட்டில் குப்பைக்கும் வரிபோட்ட ஒரே ஆட்சி திமுக தான். கருணாநிதி குடும்பம் வளமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நடைபெறும் குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல் இந்த நாட்டுக்கு தேவையா? . வரவிருக்கும் தேர்தலில் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" இவ்வாறு அவர் பேசினார்.

## "திட்டங்களை கொண்டு வர முடியாமல் உங்களை தடுப்பது யார்?" அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு சுந்தர்.சி கேள்வி

மதுரை; ஏப்.9-

''மதுரை மத்திய தொகுதிக்கு ஆளும்கட்சி அமைச்சராக இருந்தும் திட்டங்களை கொண்டு வர முடியாமல் உங்களை தடுப்பது யார்?, '' என்று தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் சுந்தர் சி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் 10 ஆண்டுகள் மத்திய தொகுதி எம்எல்ஏ வாக இருந்தும் எதுவும் செய்ய முடியவில்லை என்றால், அவர் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். ஆளும்கட்சி அமைச்சராக இருந்தே எதுவும் இந்த தொகுதிக்கு செய்ய முடியாவிட்டால் இனி என்ன செய்யப்போகிறார். சில திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. அதற்கு சில அரசியல் நிர்பந்தம், அழுத்தம் இருக்கிறது. அதனை வெளியே சொல்ல முடியவில்லை என்று வருத்தப்படுகிறார்.

இதையெல்லாம், ஒரு எம்எல்ஏ, ஆளும்கட்சி அமைச்சர் சொல்கிற வார்த்தையா?. நிதியமைச்சராக இருந்த ஒருவர், அவரது தொகுதியில் மக்களுக்கான திட்டங்களை கொண்டு வர முடியவில்லை என்றால் மக்கள் யாரிடம் சென்று முறையிடுவது. தனக்கு நேரிட்ட நிர்பந்தம் என்ன என்பதை அமைச்சர் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும். அவர் வெளிப்படையானவர், உண்மையை சொல்லக் கூடியவர் என்று சொல்கிறார்கள் அல்லவா, அவர் உண்மையை சொல்ல வேண்டியதுதானே?


மதுரை மத்திய தொகுதியில் திட்டங்களை கொண்டு வருவதற்கு யார் உங்களை தடுப்பது?. நீங்கள் வருத்தப்படுவதால் உங்களுக்கு வாக்களித்த மக்கள் கேட்கிறார்கள். அதை சொல்ல வேண்டியது உங்கள் கடமை. அதைவிட்டுவிட்டு, கேள்வி கேட்கும் எங்களைப் பார்த்து அறியாமையில் கேட்கிறோம் என்று சொல்வது நியாயமா?. நாங்கள் அவரைப் போல் அமெரிக்கா, லண்டனில் சென்று மெத்த படித்தவர்கள் கிடையாது. ஆனால், மக்கள் பிரச்சினையை தெரிந்தவர்கள்.

நான் நடுத்தர குடும்பத்தில் பிறந்து உழைத்து முன்னேறி வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இவர்களும் தமிழகத்திற்கு எதுவும் செய்ய மாட்டார்கள். மத்திய அரசுடனும் சண்டைப்போட்டுவிட்டு எதுவும் செய்ய விட மாட்டார்கள். ஐந்து ஆண்டுகளாக அமைச்சராக இருந்து விட்டு முடியாது என்று சொல்லவதற்காகவா மக்கள் உங்களுக்கு வாக்களித்து சட்டபேரவைக்கு அனுப்பி வைத்தார்கள். இப்போது மீண்டும் ஒரு முறை வாய்ப்பு தாருங்கள் என்று எப்படி சொல்கிறீர்கள். மக்கள் ஏமாற தயாராக இல்லை. மக்கள் சக்தி என்ன என்பதை தேர்தலில் காட்டுவார்கள்.

நான் மத்திய தொகுதிக்கு போட்டியிட வந்தபோது மிக கடுமையான போட்டியிருக்கும் என்று கருதிதான் வந்தேன். ஆனால், தற்போது மக்கள் முகத்தை பார்க்கும்போதும், அவர்கள் பாசமாக என்னிடம் பேசுவதை பார்க்கும்போதும் ஒரு மாற்றத்தை கொடுக்க வேண்டும் என்ற வேகம் அவர்களிடம் தெரிகிறது. அவர்களுக்கு இந்த ஆட்சி மேல் மிகப்பெரிய கோபம் இருப்பதும் தெரிகிறது. அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை கை சுத்தம் என்று சொல்கிறார்கள்.

ஆனால், மாநகராட்சியில் முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் எல்லாம், அவரது ஆட்கள் தான். எதற்கெடுத்தாலும் புள்ளி விவரத்தை கூறும் அமைச்சர், அதை பற்றி வாய்திறக்கவில்லை. மக்களுக்கு தேவை புள்ளி விவரம் இல்லை. அவர்களுக்கு நல்ல திட்டங்கள்தான் தேவை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## "உண்மையான காங்கிரஸார் தவெகவில் உள்ளனர்" : நெல்லையில் விஜய் பேச்சு



திருநெல்வேலி: ஏப்.9-

"பல கோடிகளை கொடுத்து காங்கிரஸை தங்கள் பையில் போட்டுக் கொண்டனர். ஆனால், உண்மையான காங்கிரஸார் தமிழக வெற்றிக் கழகத்தில் தான் உள்ளனர்" என்று தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பேசினார்.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள 22 சட்டப் பேரவை தொகுதிகளில் போட்டியிடும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்களை ஆதரித்து பாளையங்கோட்டை கேடிசி நகரில் நடைபெற்ற தவெக பிரச்சார பொதுக் கூட்டத்தில் அக்கட்சி தலைவர் விஜய் பேசியது:

"திமுக கையில் முழு அதிகாரம் இருந்திருந்தால் கண்டிப்பாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்காது. ஏதாவது முட்டுக்கட்டை போட்டு நிகழ்ச்சியை நடத்தவிடாமல் செய்திருப்பார்கள். தற்போது அதிகாரமில்லாத முதல்வராக ஸ்டாலின் இருக்கிறார். இதனால், இங்கு சிறப்பாக நிகழ்ச்சியை நடத்த முடிந்துள்ளது.

திமுக அரசு நமக்கு எதிராக பிரச்சினைகள், அவதூறுகள் பரப்பினார்கள். திமுக, பாஜக கூட்டணி வெளியே தனித்தனியாக இருப்பார்கள். ஆனால் இரண்டு பேரும் ஒன்றுதான். இருவரின் நோக்கமும் ஒன்றுதான். விஜய் வந்துவிடக் கூடாது என்பதுதான் அவர்களது நோக்கமே. நான் வந்ததால் ஊழல் செய்ய முடியாதபடி செய்துவிடுவேன் என்பதால் என் மீது அவர்களுக்கு கடும் ஆத்திரம்.

அவர்கள் அடுத்து ஆட்சிக்கு வரமுடியாத சூழ்நிலையை மக்கள் உருவாக்கிவிட்டனர். அவர்களின் கூட்டணி கணக்கு எடுபடவில்லை. அவர்களின் கல்லாப்பெட்டி கூட்டணி கலகலத்துப் போய் நிற்கிறது. அதை ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறார். கூட்டணி கட்சியினரே ஒருவருக்கு ஒருவர் ஓட்டு போட மாட்டர்கள் போலிருக்கிறது. திமுகவின் நேரடி கூட்டணிக்கும், மறைமுக கூட்டணிக்கும் நம் மீது கடும் ஆத்திரம். அவர்கள் குடும்பத்திலேயே விசில் சத்தம் பலமாக கேட்கிறதாம். அதனால் இன்னும் ஆத்திரம்.

சில பல கோடிகளை கொடுத்து தனது பையில் காங்கிரஸை திமுக போட்டுக் கொண்டது. ஆனால், உண்மையான காங்கிரஸார் நம்மிடம் உள்ளனர். அவர்களது சிறுபான்மை பாசம் என்ற சாயம் வெளுத்துப் போய்விட்டது.

நான் ஒவ்வொரு வீட்டுக்குள்ளேயும் போனதற்குப் பின்னரே கட்சியை ஆரம்பித்துள்ளேன். இது அரசியலை தாண்டிய உறவு. அரசியல் ஆதாயம் தேடுவோருக்கு இது புரியாது. மற்றவர்களுக்கு இது எலெக்ஷன். எனக்கு ஒரு எமோஷன். எனக்கு ஒன்று என்றாலும், மக்களுக்கு ஒன்று என்றாலும் மக்களுக்கும், எனக்கும் கண் கலங்கும்.

கரூர் விஷயத்தில் என் மீது பழிபோட்டாலும் மக்கள் என் பக்கம் நிற்கிறார்கள். இதனால், ஜனநாயகன் படத்தை முடக்கினர். அதை யார் முடக்கினார்கள் என்பது உங்களுக்கு தெரயும். அதுவும் எடுபடவில்லை.

நான் வெளியே வரக் கூடாது என்று கண்டிஷன் போட்டனர். அதுவும் எடுபடவில்லை. பின்னர் நம்மை சுற்றியிருக்கிறவர்களை வைத்து அவதூறு பரப்பினர். அதுவும் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

எத்தனை சோதனைகள், வேதனைகளை கடந்து வந்துள்ளேன். திமுக, பாஜவினரால் என்னை மக்கள் மத்தியில் இருந்து பிரிக்க முடியாது. ஒவ்வொரு வீட்டியிலும் விஜய்யும், விஜியும் இருக்கும் வரைக்கும் என்னை மக்கள் மத்தியிலிருந்து பிரிக்க முடியாது.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு சட்டப் பேரவை தொகுதியிலும் விஜய்தான் நிற்கிறேன். வேட்பாளர்தான் விஜய், விஜய்தான் வேட்பாளர். இத்தனை ஆண்டுகளாக யார் யாருக்கெல்லாம் ஓட்டு போட்டீர்கள். இந்த முறை உங்கள் குடும்பத்தில் உள்ளவருக்கு ஓட்டுப் போடுங்கள். அந்த வேட்பாளருக்கு ஓட்டுப் போடுவது நமக்கு நாமே ஓட்டு போடுவது மாதிரி. அந்த வேட்பாளர் வெற்றி பெற்றால் நீங்கள் வெற்றிபெற்றது போன்றதாகும்.

இந்த தேர்தல் 50 ஆண்டு நடக்கும் அதிசய தேர்தல். உங்களுக்காக பசும்பொன் முத்துராமலிங்க தேவர், வீரன் சுந்தரலிங்கம், வ.உ.சி., அழகுமுத்துகோன், கட்டபொம்மன், குரூஸ் பர்னாந்து போன்ற தலைவர்கள் மாதிரி தவெக உழைக்கும்.

தவெக ஆட்சியில் பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், மீனவர்கள், உழைப்பாளிகள் எல்லாரும் நன்றாக இருப்பார்கள். நமது சந்ததிகள் நன்றாக இருக்கும். எனவே வேறு யாருக்கும் ஓட்டு போட்டு ஓட்டை வீணாக்கிவிடாதீர்கள்.

மக்கள் பணத்தில் ஒரு பைசா கூட தொடமாட்டேன். தற்போது ஆளுகிறவர்களும், இதற்குமுன் ஆண்டவர்களும் இதை சொல்ல முடியுமா? நீங்கள் ஒழுங்காக ஆட்சி நடத்தியிருந்தால் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டிருக்குமா? பெண்களுக்கு பாதுப்பு கிடைக்காமல் இருந்திருக்குமா? இதற்கெல்லாம் பதில் சொல்ல தகுதி இருக்கிறதா?

இரண்டரை வயது குழந்தையை திமுகவை சேர்ந்தவர் கொலை செய்தார். விளாத்திகுளம் பகுதியில் பிளஸ் டு மாணவி கொலை செய்யப்பட்டதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்?

போலீஸாரை பொம்மையாக வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். நாங்குநேரி சம்பவத்தை ஏன் தடுக்கவில்லை? சட்டவிரோதமாக மணலை, கனிம வளங்களை திருடுகிறார்கள். குடும்பமாக கொள்ளை அடிக்கிறார்கள். ஆட்சி முழுக்க ஊழல் என்று நாறிக் கிடக்கிறது. இந்நிலையில் எந்த முகத்தை வைத்து ஓட்டு கேட்பீர்கள்?

உங்கள் பணத்தை வைத்து மக்களை விலைக்கு வாங்க முடியாது. இது மாற்றத்துக்கான தேர்தல், மாற்றத்தை கொண்டுவரப்போகும் தேர்தல். இதை உங்களாலேயோ மற்றும் பலராலேயோ தடுக்க முடியாது.

வசதியான வாழ்க்கையை தூக்கி எறிந்துவிட்டு, அத்தனை வலிகளையும் தாங்கி வந்துளளேன். தமிழகத்தில் திமுகவுக்கும் தவெகவுக்கும் தான் போட்டி. இது விசில் புரட்சி தேர்தலாக இருக்கும்" என்று விஜய் பேசினார். 'நான் தன்னந்தனி ஆளு' என்ற கட்சியின் தேர்தல் பரப்புரை பாடலை பாடி முடித்தார் விஜய்.

# பெங்களூருவில் பட்டுப் புடவை வாங்க அதிகாலை 4 மணிக்கு வரிசையில் நிற்கும் பெண்கள்




பெங்களூரு, ஏப்.9-

கர்நாடக அரசின் பட்டுத் தொழில் கழகத்தின் சார்பில் விற்பனை செய்யப்படும் பட்டுப் புடவைகள் மிகவும் பாரம்பரியம் மிக்கவையாக கருதப்படுகின்றன. புவிசார் குறியீடு பெற்ற இந்த புடவைகளுக்கு பெண்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருக்கிறது.

பெங்களூருவில் உள்ள கர்நாடக அரசின் பட்டுத் தொழில் கழகத்தின் விற்பனையகத்தில் புடவை வாங்குவதற்காக கர்நாடகாவை சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் பிற மாநிலங்களை சேர்ந்தவர்களும் குவிந்து வருகின்றனர். வாடிக்கையாளர்களை கட்டுப்படுத்த முடியாததால் கடந்த 5 ஆண்டுகளாக வாடிக்கையாளர்ளுக்கு தலா ஒரு டோக்கன் மட்டுமே தரப்படுகிறது.

இந்த டோக்கனை வாங்குவதற்காக பெண்களும், ஆண்களும் முந்தைய தினம் இரவே கடை வாசலுக்கு வந்து வரிசையில் நிற்கின்றனர். தினமும் சுமார் 500 பேர் வரை அதிகாலை 4 மணி முதல் 10 மணி வரை 6 மணி நேரம் காத்திருந்து புடவைகளை வாங்கிச் செல்கின்றனர்.

10 நிமிடம் மட்டுமே அனுமதி: அங்கு வாடிக்கையாளர் கூறும் வண்ணத்தில் புடவைகளை விற்பனையாளர்கள் காண்பிக்கின்றனர். ரூ.20 ஆயிரம் முதல் ரூ.5 லட்சம் வரையிலான விலையில் பட்டுப் புடவைகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்ய வேண்டும். ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு புடவை மட்டுமே வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் பல புடவைகளை பார்த்து, தேர்வு செய்வதற்கு அனுமதி இல்லை என நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

# ஆதாரங்கள் தராவிடில் முதல்வர் செயலாளருக்கு எதிரான வழக்கை எப்படி விசாரிப்பது? ஐகோர்ட்



சென்னை, ஏப்.9-

தேர்தல் நடத்தை விதிகளை மீறி செயல்படுவதாக முதல்வரின் செயலாளர் உமாநாத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆதாரங்களும் தாக்கல் செய்யாத நிலையில் அவருக்கு எதிரான வழக்கை எப்படி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

பாஜகவை சேர்ந்த வழக்கறிஞர் மோகன்தாஸ் தாக்கல் செய்த மனுவில், தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ள நிலையில், முதல்வரின் செயலாளர் உமாநாத், தேர்தல் நடத்தை விதிகளை மீறும் வகையில் செயல்பட்டு வருகிறார் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் அறிவிப்புக்கு பிறகு அரசு அதிகாரிகள் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் நிலையில், தொடர்ந்து முதல்வரின் செயலாளராக, உமாநாத், மாவட்ட ஆட்சியர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் உத்தரவுகளை பிறப்பித்து வருவதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிராக செயல்படும் முதல்வரின் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று வழக்கறிஞர் மோகன் தாஸ் மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி அருள்முருகன் அடங்கிய அமர்வு, ஐஏஎஸ் அதிகாரிக்கு எதிராக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யாத நிலையில் இந்த பொதுநல வழக்கை எப்படி விசாரணைக்கு ஏற்றுக் கொள்ள முடியும் என கேள்வி எழுப்பியது.

மேலும், புகார்கள் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், ஐஏஎஸ் அதிகாரி உமாநாத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரிய வழக்கில், அவரை எதிர் மனுதாரராக சேர்க்கவில்லை என்றும் நீதிபதிகள் சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து, உமாநாத்தை எதிர் மனுதாரராக சேர்க்க அவகாசம் வழங்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனை ஏற்ற நீதிபதிகள், விசாரணையை ஏப்ரல் 10ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

# அரியலூர்: அமைச்சர் சிவசங்கரின் காரை 4வது முறையாக சோதனை செய்த தேர்தல் பறக்கும் படை




அரியலூர், ஏப்.9-

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கார் 4வது முறையாக தேர்தல் பறக்கும் படையினரின் சோதனையில் சிக்கியது.

அரியலூர் மாவட்டத்தில் 2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணையத்தின் சார்பில் அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டப்பேரவை தொகுதிகளுக்கு தலா 9 கண்காணிப்பு குழுக்களும், 9 பறக்கும் படைகளும் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் வாக்காளர்களுக்கு ஏதேனும் பணம் பட்டுவாடா செய்ய சட்டவிரோதமாக பணம் கொண்டு செல்லப்படுகிறதா, தேர்தல் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா ? என்பது குறித்து கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில் அரியலூர் பெரம்பலூர் சாலையில் அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கரின் கார் இன்று (ஏப்.8) காலை சென்று கொண்டிருந்தது. அப்போது அரியலூர் அரசு மருத்துவமனை அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த தேர்தல் பறக்கும் படை குழுவினர், அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கரின் காரை மறித்து சோதனையில் ஈடுபட்டனர். பறக்கும் படையினரின் சோதனைக்கு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் முழு ஒத்துழைப்பு கொடுத்தார்.

மேலும், சோதனையில் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் எதுவும் இல்லாததால் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கரின் காரை தொடர்ந்து செல்ல தேர்தல் பறக்கும் படையினர் அனுமதித்தனர். ஏற்கனவே, ஏப்.1, ஏப்.5 தேதிகள் என இந்த மாதம் மட்டும் இரு முறையும் அமைச்சர் சிவசங்கரின் கார் தேர்தல் பறக்கும் படையினரிடம் சோதனைக்கு சிக்கியது. அப்போதும் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் கிடைக்கவில்லை. மொத்தம் இதுவரை 4 முறை அமைச்சரின் கார் பறக்கும் படையினரின் சோதனை சிக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# “ஐ.பி.செந்தில்குமார் மாபெரும் மெகா வெற்றி பெறுவார்!” காரணங்களை அடுக்கிய விசிக தலைவர்



சின்னாளபட்டி, ஏப்.9-

திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்களை ஆதரித்து விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் தொல். திருமாவளவன், திண்டுக்கல் காந்திமார்க்கெட் அருகே திறந்த வேனில் தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

*திருமாவளவன் உரையின் முக்கியக் குறிப்புகள்:*

*வெற்றி ரகசியம்:* "தளபதியார் தலைமையிலான திமுக கூட்டணி 200 இடங்களில் மாபெரும் வெற்றி பெறும். இதற்கு 'கூட்டணி பலம்', 'திமுக அரசின் சாதனைகள்' மற்றும் 'தேர்தல் அறிக்கை' ஆகிய மூன்றுமே முக்கியக் காரணங்கள்" எனப் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

*கொள்கைப் பொருத்தம்:* திமுகவுடன் எங்களுக்கு இருப்பது வெறும் தேர்தல் கூட்டணி மட்டுமல்ல, இது கொள்கை மற்றும் கோட்பாடு ரீதியான பொருத்தம். இதனால்தான் 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து பயணிக்கிறோம் என்றார்.

*அதிமுக பாஜக விமர்சனம்:* "ஜெயலலிதா அம்மையார் அவர்கள் பாஜகவுடன் கூட்டணி வைத்தது பெரும் பிழை என்று ஒப்புக்கொண்டார். ஆனால், இன்று எடப்பாடி பழனிசாமி சுயநலத்திற்காக பாஜகவைத் தோளில் சுமக்கிறார். தேர்தல் ஆதாயத்திற்காக மட்டுமே அதிமுக கூட்டணி கைகோர்த்துள்ளது" எனச் சாடினார்.

* உறுதி : * "என்னிடம் ஆசை காட்டிப் பார்த்தார்கள். ஆனால் சன்பரிவார் அமைப்புகளுக்கு ஒருபோதும் விசிகவில் இடமில்லை என்பதில் உறுதியாக இருக்கிறேன்" எனத் தொண்டர்களின் உற்சாகத்திற்கு இடையே முழங்கினார். அப்போது அவர் பொதுமக்கள் மத்தியில் பேசும்போது, திராவிட மாடல் ஆட்சி நாயகன் தளபதியார் தலைமையில் அமைந்த திமுகவின் கூட்டணியின் பலம், அரசின் சாதனைகள், திமுக தேர்தல் அறிக்கை என மூன்று காரணங்களுக்காக 200 இடங்களில் மாபெறும் வெற்றி பெறும் என்றதோடு, திமுக கூட்டணியில் உள்ளவர்களுக்கு அரசியல் பொருத்தம் இருக்கிறது, கொள்கை பொருத்தம் இருக்கிறது, கோட்பாடு பொருத்தம் இருக்கிறது அதன் காரணமாகத்தான் பல ஆண்டுகளாக கூட்டணியில் நீடிக்கிறோம்.

பாஜகவால் கடந்த 25 ஆண்டுகளாக எவ்வளவு முயற்சி செய்தும் தமிழகத்தில் காலூன்ற முடிய வில்லை அதற்கு கலைஞர் மற்றும் ஜெயலலிதா தான் காரணம் தேர்தல் ஆதாயத்திற்கு மட்டுமே அதிமுக கூட்டணி கைகோர்த்து உள்ளனர். செந்தில்குமார் ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. மீண்டும் சட்டமன்றத்திற்கு செல்வார் உங்கள் உணர்வுகளை சட்டமன்றத்தில் பிரதிபலிப்பார். உங்களுக்காக குரல் கொடுத்து பேசுவார். ஆனால் தான் அவரை தேடி வந்திருக்கிறேன். வாழ்த்துக்களை தெரிவிப்பதற்காக அவரது வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக வந்துள்ளேன்.

எடப்பாடி பழனிச்சாமியால் பாஜகவுடன் கூட்டணி வைத்தது நியாயப்படுத்தி சொல்ல முடியுமா எந்த அடிப்படையில் பிஜேபியோட அதிமுக கூட்டணி வைத்துள்ளது. மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா புது மேடையில் எனது அரசியல் வாழ்வில் நான் பெரும் தவறு இழைத்து விட்டேன் பிழை செய்துவிட்டேன் பாஜகவுடன் கூட்டணி வைத்தது நான் செய்த பெரும்பிழை செய்துவிட்டேன் அதற்கு பரிகாரமாக தான் அவர்களின் ஆட்சியை கவிழ்த்தேன். என சொன்னவர் ஜெயலலிதா. ஜெயலலிதா இருக்கும்போது ஒரு காலத்திலும் பாஜகவுடன் கூட்டணி அமைக்காது என சொன்னார் இது எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரியுமா தெரியாதா அதிமுக பாஜகவுடன் எந்த அடிப்படையில் கூட்டணி வைத்தது என்பதை நியாயப்படுத்த முடியுமா முடியாது. அந்தக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்சியும் ஒருவருக்கு ஒருவர் கடுமையாக விமர்சித்துக் கொண்டவர்கள் மட்டுமின்றி சவால் விட்டுக் கொண்டவர்கள் எடப்பாடி உடன் கூட்டணி வைத்தால் தூக்கு போட்டு சாகலாம் என்று சொன்ன தலைவர் அதிமுக கூட்டணியில் தற்பொழுது இருக்கிறார். எடப்பாடி கடுமையாக விமர்சித்த அன்புமணி ராமதாஸ் தற்போது அதிமுக கூட்டணியில் இருக்கிறார். பாஜகவை கடுமையாக விமர்சித்த எடப்பாடி தற்போது அவர்களுடன் கூட்டணி வைத்துள்ளார். கொஞ்சம் கூட அவர்களுக்கு கருத்து அடிப்படையில் எந்த பொருத்தமும் கிடையாது. தற்பொழுது தேர்தல் ஆதாயத்திற்கு மட்டுமே கைகோர்த்து உள்ளனர். இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் பாஜகவினர் தங்களது கைவரிசைகளை காட்ட முடிகிறது ஆனால் தமிழகத்தில் காட்ட முடியவில்லை.

நிகழ்சியின்போது, விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த மைதீன்பாவா, மற்றும் தோழமை கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, திமுக துணைச் செயலாளர்கள் ஆர்.நாகராஜன், பிலால்உசேன், மார்கிரெட் மேரி, திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர்கள் கலைராஜன், அக்பர், வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மற்றும் திமுக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# விஜய் பரப்புரையில் 5 விபத்துகள் 16 பேருக்கு சிகிச்சை

நெல்லை, ஏப்.9-

தவெக தலைவர் விஜய்யின் பரப்புரையில் இன்று மட்டும் 5 விபத்துகள் ஏற்பட்டுள்ளது. தமிழக சட்டசபை தேர்தல் பிரசாரத்தின் ஒரு பகுதியாக தவெக தலைவரும் நடிகமருமான விஜய் நெல்லை மற்றும் தூத்துக்குடியில் இன்று பிரசாரம் மேற்கொண்டார். இதையொட்டி அவர், சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று நண்பகல் 11.40 மணிக்கு தூத்துக்குடி விமான நிலையம் வந்தார். தூத்துக்குடி விமான நிலையததில் இருந்து விஜய் புறப்படும் முன் இரண்டு விபத்துகள் நிகழ்ந்துள்ளன. தொடர்ந்து கே.டி சி நகரில் பிரசாரம் செய்த விஜய், அதன் பின்னர், சாலை மார்க்கமாக சென்றார்.Long Distance Bus & Rail

கிட்டத்தட்ட 35 கிமீ வரை சாலை வழியாக அவரது பயணத்திற்கு தேர்தல் கமிஷனிடம் அனுமதி பெறப்பட்டது. பிரசார வாகனத்தின் மேல்புறம் நின்று கொண்டே சாலையின் இருபுறமும் திரண்டிருந்த மக்கள் மற்றும் தொண்டர்களை நோக்கி கைகளை அசைத்தாவறும். வணக்கம் வைத்தவாறும் அவர்களை உற்சாகப்படுத்தினார். விஜயின் பிரசார வாகனத்தை பின்தொடர்ந்தபடி ஏராளமான பைக்குகளில் ரசிகர்கள் ஹெல்மெட் அணியாமல் வந்தனர். அப்போது ஒரு பைக்கில் சென்ற ரசிகர் நிலைதடுமாறி கீழே விழுந்தார். அந்த பைக் மீது பின்னால் வாகனங்கள் அடுத்தடுத்து மோதியது.பைக்குகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 7 பேர் காயம் அடைந்தனர். அதனை தொடர்ந்து நெல்லை நாராயணம்மாள்புரத்தில் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்த இருசக்கர வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. தொடர்ந்து திருநெல்வேலியில் அரசுப்பேருந்து மோதி காயமடைந்த இளைஞர் உட்பட 16 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது

# கால்வாயில் மணல் லாரி பாய்ந்து விபத்து

திருமலை, ஏப்.9-

கட்டுப்பாட்டை இழந்து பாலத்திலிருந்து கால்வாயில் மணல் லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் டிரைவர் படுகாயமடைந்தார். ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டம் செப்ரோலுவின் புறநகர்ப் பகுதியில் உள்ள கொம்மமூர் கால்வாய்ப் பாலம் அருகே நேற்று மணல் ஏற்றிக்கொண்டு லாரி வந்துகொண்டிருந்தது. அப்போது திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்த லாரி பாலத்தின் பாதுகாப்புச் சுவரில் பலமாக மோதி நேராகக் கால்வாயில் விழுந்தது.

விபத்தின் தாக்கத்தால் வாகனத்தின் முன்பகுதி முற்றிலுமாக நசுங்கியது. இதனால் லாரியின் டிரைவர் முன்புற கேபினுக்குள் சிக்கி கொண்டார். இதனை கண்ட அவ்வழியே சென்ற வாகன ஓட்டிகளும் உள்ளூர் மக்களும் உடனடியாகச் செயல்பட்டு பாலத்தின் கீழ் சென்று அவரை வெளியே கொண்டு வந்தனர்.

மயக்க நிலையில் இருந்த டிரைவரை சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் குண்டூர் அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். தகவல் கிடைத்ததும், செப்ரோலு போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ஆய்வு செய்தனர்.

கால்வாயில் விழுந்த டிப்பர் லாரியை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, அதிவேகமே விபத்திற்குக் காரணம் என போலீசார் முடிவு செய்து இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக போலீசார் தெரிவித்தனர்

# திருப்பரங்குன்றம் மலையில் தொல்லியல் ஆய்வுக்கு மாநில அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை: மத்திய அரசு



மதுரை, ஏப்.9-

திருப்பரங்குன்றம் மலையில் மத்திய தொல்லியல் துறை ஆய்வுக்கு வருவாய்த் துறை அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை என உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு சார்பில் குற்றம்சாட்டப்பட்டது.

திருப்பரங்குன்றம் ஆடு, கோழி பலியிட தடை கோரிய வழக்கில் திருப்பரங்குன்றம் மலையை மத்திய தொல்லியல் துறை ஆய்வு நடத்த வேண்டும், ஒரு ஆண்டுக்குள் ஆய்வை முடிக்க வேண்டும் என நீதிபதி எஸ்.ஸ்ரீமதி உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை நிறைவேற்றக் கோரியும், உயர் நீதிமன்ற உத்தரவுபடி திருப்பரங்குன்றம் மலையில் தொல்லியல் ஆய்வு நடத்தாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரி மதுரை கே.கே.ரமேஷ், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், எஸ்.ஸ்ரீமதி அமர்வில் விசாரணைக்கு வந்தது. மத்திய அரசு சார்பில், ‘மத்திய தொல்லியல் துறை ஆய்வுக்கு தயாராக உள்ளது. மாநில வருவாய்த் துறை அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் ஆய்வு மேற்கொள்ள முடியாது. வருவாய் அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை’ எனக் கூறப்பட்டது.

மனுதாரர் தரப்பில், ‘உச்ச நீதிமன்றத்திலும் மத்திய அரசு இதே பதிலைத் தான் வழங்கியது’ எனக் கூறப்பட்டது. தொடர்ந்து மத்திய அரசு தரப்பில், ‘இதே கோரிக்கையுடன் மனுதாரர் உச்ச நீதிமன்றத்திலும் மனுத் தாக்கல் செய்துள்ளார்’ எனக் கூறப்பட்டது.

அதற்கு மனுதாரர் தரப்பில், ‘திருப்பரங்குன்றம் கோயிலில் இருந்து அறநிலையத் துறையை வெளியேற்ற வேண்டும் என அங்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், ‘திருப்பரங்குன்றம் மலையை மத்திய தொல்லியல்துறை கையகப்படுத்த வேண்டும் என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசும், மாநில அரசும் கூட்டு ஆய்வு நடத்தாமல் எதுவும் செய்யமுடியாது’ என்றனர்.


மத்திய அரசு தரப்பில், ‘மாநில வருவாய்த் துறையினர் ஒத்துழைப்பு வழங்கவில்லை’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த வழக்கில் மதுரை மாவட்ட ஆட்சியர் 4வது எதிர்மனுதாரராக சேர்க்கப்படுகிறார். அவர் மத்திய தொல்லியல் துறையுடன் கூட்டு ஆய்வு நடத்த வருவாய்த்துறை ஒத்துழைப்பு வழங்க உத்தரவிட வேண்டும். கூட்டு ஆய்வை மே மாதத்தில் முடிக்க வேண்டும். விசாரணை ஜூன் மாதத்துக்கு ஒத்திவைக்கப்படுகிறது’ என உத்தரவிட்டனர்.

# விமானத்தில் வந்து தேர்தலில் வாக்களிக்க ரூ.2 லட்சம் வரை செலவு செய்யும் மலையாளிகள்

திருவனந்தபுரம், ஏப்.9- அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக வளைகுடா நாடுகளில் விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் இந்தியாவுக்கான விமான டிக்கெட் மிகக் கடுமையாக உயர்ந்திருக்கிறது. பொதுவாக ஐக்கிய அரசு அமீரக தலைநகர் அபுதாபி மற்றும் துபாய் உள்ளிட்ட நகரங்களில் இருந்து இந்திய நகரங்களுக்கு வருவதற்கு ரூ.10,000 முதல் ரூ.20,000 வரை விமான கட்டணம் வசூல் செய்யப்பட்டது.

போர் காரணமாக தற்போது விமான கட்டணம் ஒரு லட்சம் ரூபாய் முதல் 2 லட்சம் ரூபாய் வரை உயர்ந்திருக்கிறது. மிகவும் இக்கட்டான நேரங்களில் ரூ.2.5 லட்சம் வரைகூட விமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது.



எனினும் ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் மலையாளிகள், கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க விமான டிக்கெட்டுக்கு ரூ.2 லட்சம் வரை செலவு செய்து சொந்த ஊருக்கு திரும்பி வருகின்றனர். இதுதொடர்பாக முனீர் என்பவர் கூறும்போது, "கடந்த 19 ஆண்டுகளாக ஐக்கிய அரபு அமீரகத்தில் வசித்து வருகிறேன். ஒவ்வொரு தேர்தலின்போதும் கேரளாவுக்கு சென்று வாக்களிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறேன். தற்போதைய சட்டப்பேரவைத் தேர்தலுக்காக கேரளா செல்ல ரூ.2.3 லட்சத்துக்கு டிக்கெட் வாங்கி உள்ளேன். எவ்வளவு செலவானாலும் வாக்குரிமையை செலுத்துவதை கடமையாக கருதுகிறேன்" என்று தெரிவித்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் அஜ்மான் நகரில் வசிக்கும் ஆஷா என்பவர் கூறும்போது, "கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊருக்கு செல்ல திட்டமிட்டு உள்ளேன். இதற்காக ஒரு லட்சம் ரூபாய்க்கு விமான டிக்கெட் வாங்கி உள்ளேன். எனது தங்கை நிம்மியும் இதே தொகைக்கு விமான டிக்கெட் முன்பதிவு செய்திருக்கிறார்" என்றார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் சுமார் 10 லட்சம் மலையாளிகள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் விமான டிக்கெட்டுக்கு ரூ.2 லட்சம் வரை செலவு செய்து கேரளாவுக்கு திரும்பி வருகின்றனர்.

# "மே 10ம் தேதி ரூ. 8 ஆயிரம் பரிசுக்கூப்பன் நிச்சயம்" மக்கள் வெள்ளத்தில் மிதந்தபடி ஐ.பி.ஆரின் வாக்கு சேகரிப்பு

சின்னாளபட்டி, ஏப்.9- திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியின் திமுக வெற்றி வேட்பாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கிராமம் கிராமமாக சென்று தொடர்ந்து தனக்கு வாக்களித்து வரும் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்தும், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தும் வருகிறார்.

தருமத்துப்பட்டி, சுரக்காய்ப்பட்டி, கன்னிவாடி, பி.பண்ணைப்பட்டி, தெத்துப்பட்டி, டி.புதுப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். டி.புதுப்பட்டி ஊராட்சிக்கு வந்தபோது மக்கள் வெள்ளம் அலைமோதியது. அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஊருக்குள் வரும்பொழுது மக்கள் வெள்ளத்தில் மிதந்துவருவதுபோல



இருந்தது. அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், மகளிர் உரிமைத்தொகை, விடியல் பயணம், ரூ. 8 ஆயிரம் பரிசுக்கூப்பன் உட்பட அனைத்து திட்டங்களிலும் மகளிரை மேம்படுத்தியவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்தான் என்றார். நீங்கள் வாக்கு பதிவு நாள் அன்று உதயசூரியனுக்கு வாக்களித்தபின்பு மே 10ம் தேதி மகளிர் தொகை ரூ. 2 ஆயிரமும், ரூ. 8 ஆயிரத்திற்கான கூப்பனும் இந்த ஊராட்சியில் தோழமை கட்சி நிர்வாகிகளோடு, திமுக நிர்வாகிகள் இணைந்து தேர்தல் பணியாற்றி வருவது கண்கூடாக தெரிகிறது.

காரணம் இங்கு பெண்கள் மற்றும் பொதுமக்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. இதேபோல் வாக்குப்பதிவு நாள் அன்றும் பம்பரமாய் சுழன்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க ஒவ்வொரு திமுக தொண்டனும் அயராது உழைக்க வேண்டும் என்றார். 1989ம் ஆண்டு முதல் இன்றுவரை எனக்கு கைகொடுத்த கிராமங்களில் டி.புதுப்பட்டியும் ஒன்று. இந்த ஊராட்சிக்கு தேவைப்படும் அனைத்து நலத்திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுத்துள்ளேன். இனியும் பொதுமக்கள் கொடுக்கும் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பேன், இது உறுதி என்றார். தேர்தல்

பிரச்சாரத்தின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, இன்பராஜ், மணி, ஒன்றிய துணை செயலாளர் மாங்கரை திருப்பதி, நிலவளவங்கி முன்னாள் செயலாளர் சக்கரவர்த்தி, மணிமாறன், டி.புதுப்பட்டி கிளைச் செயலாளர் உதயகுமார் உட்பட திமுக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக தலைமைச் செயலர் முருகானந்தம் அதிரடி மாற்றம்

சென்னை, ஏப்.9- தமிழக தலைமைச் செயலர் முருகானந்தம் அதிரடியாக மாற்றப்பட்டார். அதேபோல், லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியும் மாற்றப்பட்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23ம் தேதி நடைபெறுகிறது. இந்நிலையில், தமிழக தலைமைச் செயலர் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியை மாற்றி தேர்தல் ஆணையம் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



புதிய தலைமைச் செயலராக சாய்குமார் ஐஏஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல், இவர் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் தனிச் செயலாளராகவும் இருந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

தமிழக தலைமைச் செயலர் தவிர ஆயுதப்படை, லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியும் மாற்றப்பட்டுள்ளார். புதிய டிஜிபியாக சந்தீப் மிட்டலை நியமனம் செய்து இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த உத்தரவை உடனடியாக அமல்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணியில் இணைந்தது தொடர்பாக மாலை 6 மணிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் அதிகாரிகள் மாற்றம் என்பது வழக்கமாக நடைபெறுவதுதான் என்றாலும்கூட, தேர்தலுக்கு 2 வாரங்களே உள்ள நிலையில், தமிழக தலைமைச் செயலரையே அதிரடியாக மாற்றி உத்தரவிட்டுள்ளது கவனம் பெற்றுள்ளது.

# மேற்கு வங்கத்தில் சுமார் 91 லட்சம் வாக்காளர்கள் நீக்கம்

புதுடெல்லி, ஏப்.9- மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு ஏப்.23, 29ம் தேதிகளில் 2 கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளது. அண்மையில் தலைமைத் தேர்தல் ஆணையம் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை தயாரித்துள்ளது. அதில் சுமார் 91 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டது தெரியவந்துள்ளது. எனினும் அதிகாரப்பூர்வ இறுதிக்கட்ட வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் இன்னும் வெளியிடவில்லை.

கடந்த பிப்ரவரி 28ம் தேதி வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 63.66 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டிருந்தனர். இதையடுத்து மேற்கு வங்கத்தில் 7.66 கோடியாக இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 7.04 கோடியாகக் குறைந்தது.



இதைத் தொடர்ந்து நீதித்துறை அதிகாரிகள் நடத்திய பரிசீலனையின் போது மேலும் 27.16 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். இதையடுத்து மொத்தமாக நீக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 90.83 லட்சமாக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் கூறும்போது, "விரைவில் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் உள்ள வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். இந்தப் பட்டியலை அனைவரும் பார்வையிடும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும். வாக்காளர் பட்டியலில் சேர்க்குமாறு புதிதாக யாராவது விண்ணப்பித்திருந்தால், அவர்களின் பெயர்கள் சட்டவிதிகளின் படி சேர்க்கப்படும்" என்றார்.

# "பல்லாவரம் தொகுதியில் சுற்றுப்புறச் சூழலை காப்பதே எனது முதல் பணி"

## ஐஜேகே வேட்பாளர் வெங்கடேசன் உறுதி

பல்லாவரம், ஏப்.9- பல்லாவரம் தொகுதியில் சுற்றுப்புற சூழலை பாதுகாப்பது எனது முதல் பணி என ஐஜேகே வேட்பாளர் வழக்கறிஞர் வி.வெங்கடேசன் தெரிவித்தார்.

பல்லாவரம் சட்டப்பேரவைத் தொகுதி, அதிமுக கூட்டணியில் ஐஜேகே கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அக்கட்சியைச் சார்ந்த வழக்கறிஞர் வி.வெங்கடேசன் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறார். தான் வெற்றி பெற்றால் பல்லாவரம் தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றுவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்பது குறித்து நம்மிடம் கூறியதாவது:பல்லாவரம் தொகுதியில் ஏராளமான நீர்நிலைகள் உள்ளன.



அந்த நீர்நிலைகள் முழுவதும் மாசடைந்து கழிவுநீர் குட்டைகளாக காட்சியளிக்கின்றன. இதனால் நிலத்தடி நீரும், சுற்றுப்புற சூழலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.ஏரிகளை பாதுகாப்பதன் மூலம் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும். அப்போது நமக்கு தூய்மையான குடிநீர் கிடைக்கும். பல்லாவரத்தில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததால், பலர் தொற்று நோய்களுக்கு ஆளாகினர். இதைத் தடுத்து சுகாதாரமான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.பல்லாவரம் முதல் குன்றத்தூர் வரை சாலை விரிவாக்கம் செய்யப்படாததால் பம்மல், அனகாபுத்தூர் மக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். இச்சாலை நான்கு வழி சாலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருநீர்மலை ரங்கநாதர் கோயிலில் ரோப் கார் வசதி ஏற்படுத்தப்படும் என அறிவித்தும் திமுக அரசு செய்யவில்லை. நாங்கள் வந்தால் ரோப் கார் வசதி ஏற்படுத்தப்படும்.அஸ்தினாபுரம் பகுதியில் குறைந்த மின் அழுத்தத்தை போக்க துணை மின் நிலையம் கொண்டுவரப்படும். பல்லாவரம் தொகுதி முழுவதும் பாகுபாடு இன்றி சமமான வளர்ச்சி அடைய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். புதைவட மின் கம்பி பாதை திட்டம் செயல்படுத்தப்படும், கோயில் நிலங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் குடியிருக்கின்றனர். அவர்களுக்கு பட்டா வழங்க சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்படும்.

பல்லாவரம் தொகுதியில் குறிப்பாக சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சுவாச தொற்று நோய்களால் பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றை தடுப்பதற்க விழிப்புணர்வு ஏற்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே பல்லாவரம் தொகுதியில் சுற்றுச்சூழலை பாதுகாத்து, முதன்மை தொகுதியாக மாற்ற முயற்சி மேற்கொள்வேன். இவ்வாறு அவர் கூறினார்.

# தற்காலிக போர் நிறுத்தம் எதிரொலி தங்கம் விலை பவுனுக்கு ரூ.2,720 உயர்வு

சென்னை, ஏப்.9- 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் பவுனுக்கு ரூ.2,720 என விலை உயர்ந்துள்ளது. வெள்ளி விலையும் இன்று கிலோவுக்கு ரூ.10,000 என விலை உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.



இந்தச் சூழலில், ஈரான் மீது இரண்டு வார காலத்துக்கு தாக்குதல் நடத்த மாட்டோம் என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார். ஈரானும் இந்த தற்காலிக போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டுள்ளது. இதனால், இரு தரப்புக்கும் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த இடைக்கால போர் நிறுத்தம் சர்வதேச அளவில் வணிகத்தில் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்தியாவிலும் இது எதிரொலித்துள்ளது.

காலை இந்திய பங்குச் சந்தை வர்த்தகம் ஏற்றத்துடன் தொடங்கியது. இந்தச் சூழலில் இன்று தங்கம் விலையும் உயர்ந்துள்ளது.

சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.340 மற்றும் பவுனுக்கு ரூ.2,720 என விலை உயர்ந்தது. இதனால் ஒரு கிராம் தங்கம் ரூ.14,200க்கும், ஒரு பவுன் ரூ.1,13,600க்கும் விற்பனை ஆகிறது.

24 காரட் தங்கம் இன்று ஒரு கிராம் ரூ.15,491 மற்றும் ஒரு பவுன் ரூ.1,23,928க்கும் விற்பனை ஆகிறது. வெள்ளி கிராமுக்கு ரூ.10 என உயர்ந்து, ஒரு கிராம் ரூ.265க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.10,000 உயர்ந்து, ஒரு கிலோ ரூ.2,65,000க்கும் விற்பனை ஆகிறது.



■ மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசன்,பெரியஇலந்தைகுளம் கிராமத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். தனியரசு பேரவையின் சார்பில் மாவட்ட செயலாளர் அய்யூர்தயாளன், தலைமையில் ஒன்றிய செயலாளர் நல்லையன், கைத்தறி ஆடை மலர்மாலை அணிவித்து வரவேற்பு கொடுத்தார். இதில் தனியரசு பேரவை மாவட்ட ஒன்றிய பேரூர் கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் அதிகபட்ச வெப்பநிலை அதிகரிக்கும்: வானிலை மையம்

சென்னை, ஏப்.9- தமிழ்நாட்டில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 23 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக் கூடும் என வானிலை



மையம் தெரிவித்துள்ளது. சென்னையில் அதிகபட்ச வெப்பநிலை 3637 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

# "தென்னிந்திய பார்வேர்டு பிளாக் கட்சியில் பிளவு! அமைச்சர் ஐ.பி முன்னிலையில் திமுகவில் இணைந்த அருண்முருகேசன்

சின்னாளபட்டி, ஏப்.9- தென்னிந்திய பார்வேர்டு பிளாக் கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் அருண்முருகேசன், அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் திமுகவில் இணைந்தார். அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களில் ஐயா ஐ.பெரியசாமி அவர்கள் மக்கள் நலனுக்காக தொடர்ந்து உழைத்து வருபவர் என்று அருண்முருகேசன் புகழாரம் சூட்டினார்.



தென்னிந்திய பார்வேர்டு பிளாக் கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் அருண்முருகேசன் மற்றும் நிர்வாகிகள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்;களுக்கு சால்வை அணிவித்து, பூங்கொடுத்து கொடுத்து தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். திமுகவில் இணைந்தவர்களுக்கு கட்சியின் சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தமிழக முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோரின் செயல்பாடுகளால் மாற்றுக் கட்சியினர் அதிக அளவில் திமுகவில் இணைந்து வருகின்றனர் என்றதோடு இன்று நம் கழகத்தில் இணைந்த அருண்முருகேசனுக்கு என்றும் உறுதுணையாக இருப்பேன் என்றார்;. திமுகவில் இணைந்தது குறித்து தென்னிந்திய பார்வேர்டு பிளாக் கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் அருண்முருகேசன் கூறுகையில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களில் ஐயா ஐ.பெரியசாமி அவர்கள் தனித்தன்மை வாய்ந்தவர். பொதுமக்களின் நலனுக்காக அயராது உழைத்து வரும் ஐயா ஐ.பெரியசாமி அவர்களின் செயல்பாடுகள் என்னை திமுகவில் இணையவைத்தது என்றார்.

நிகழ்ச்சியின்போது மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணை செயலாளர் நாகராஜன், பிலால்உசேன், மார்க்கிரேட் மேரி, பொருளாளர் சத்தியமூர்த்தி, துணை மேயர் ராஜப்பா, மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாநகர திமுக வர்த்தக அணி அமைப்பாளர் வெங்கடேசன், சதீஷ்குமார், மணிகண்டன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம், புளியங்குடி வீராசாமி செட்டியார் பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில், இளம் வாக்காளர்களிடையே 100% வாக்குப்பதிவு வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், தலைமையில் தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழி யினை அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.



■ தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வளாகத்தில் இருந்து 100% வாக்குப்பதிவை வலியுறுத்தும், "என்வாக்குஎன்கடைமை"என பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் கலந்துகொண்டு விழிப்புணர்வு மாரத்தான் போட்டியில், உறுதிமொழி எடுத்துக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் தலைமையில் துவக்கிவைத்து கலந்துகொண்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியம் அழகாபுரி ஊராட்சியில் திமுக வேட்பாளர் வெங்கடேசன், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். மக்கள் நீதி மய்யம் கட்சியின் சோழவந்தான் மாவட்ட செயலாளர் மெடிக்கல் ரமேஷ் தலைமையில் அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் ரவி, பட்டாசு வெடித்து ஆலுயரமாலை கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்து தெரி வித்தனர். அருகில் கட்சி நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம் பாலமேட்டில் சோழவந்தான் தொகுதி அதிமுக வேட்பாளர் மாணிக்கம், மஞ்சமலை மடத்துக்கமிட்டி மற்றும் 10 மேற்பட்ட சங்க நிர்வாகிகளிடம் இரட்டை இலைக்கு சின்னத்திற்கு ஆதரவு கேட்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அவருடன் அதிமுக ஒன்றியசெயலாளர்கல்லணை ரவிச்சந்திரன், நகரச் செயலாளர் அழகுராஜ், வி.கே.குமார், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகளும் கூட்டணி கட்சியினரும் உடன் இருந்தனர்.



## வாவிடமருதூரில் வீணாகும் 10,000 நெல் மூட்டைகள்! தேர்தல் பணியைச் சாக்கு சொல்லி விவசாயிகளை வஞ்சிப்பதா

அலங்காநல்லூர் ஏப்.9-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள வாவிடமருதூர் கிராமத்தில், அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் அதிகாரிகளின் முறையற்ற செயல்பாடுகளால் 10,000 க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் தேக்கமடைந்து வீணாகி வரும் அவலம் ஏற்பட்டுள்ளது.

*குடோன்களுக்குச் செல்லாத லாரிகள்:* அறுவடை செய்யப்பட்டு 15 நாட்களுக்கு மேலாகியும், மூட்டைகளை குடோன்களுக்கு எடுத்துச் செல்ல லாரிகள் வரவில்லை. இதனால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு வயல்வெளிகளில் நெல் மூட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன.

கடந்த இரண்டு நாட்களாகப் பெய்த மழையினால் கொள்முதல் நிலையத்தில் தண்ணீர் புகுந்து, நெல் மூட்டைகள் நனைந்து அழுகத் தொடங்கியுள்ளன. இதனால் 70க்கும் மேற்பட்ட விவசாயிகளின் உழைப்பு வீணாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

*அதிகாரிகளின் அலட்சிய பதில்:* இது குறித்து அதிகாரிகளிடம் கேட்டால், "தேர்தல் பணியில் இருப்பதால் தற்போது லாரிகளை அனுப்ப முடியாது" என அலட்சியமாகப் பதிலளிப்பதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

*போராட்ட எச்சரிக்கை:*

"இரண்டு நாட்களுக்குள் இந்த மூட்டைகளை அரசு அகற்றவில்லை என்றால், அலங்காநல்லூர் கேட்டுக்கடை பகுதியில் அனைத்து விவசாயிகளையும் ஒன்று திரட்டிப் மிகப்பெரிய சாலை மறியல் போராட்டம் நடத்துவோம்" எனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



## “திருப்பூர் வடக்கில் தவாக! வேட்புமனுத் தாக்கல் செய்தார் Py. தட்சிணாமூர்த்தி!

திருப்பூர் ஏப். 9-

நடைபெற இருக்கின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில், தமிழக வாழ்வுரிமைக் கட்சி (தவாக) சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தக்ஷிணாமூர்த்தி தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

*வேட்பாளர் பின்னணி:* அனைத்து வெள்ளாளர் இன முன்னேற்ற சங்கத்தின் நிறுவனரான றிஹ். தட்சிணாமூர்த்தி, சமுதாய அமைப்புகளின் ஆதரவுடன் இந்த முறை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் களம் காண்கிறார். திருப்பூர் வடக்குத் தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் கா. சிவப்பிரகாசியிடம் தனது வேட்புமனுவை முறைப்படி வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் ஜாபர் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் உடனிருந்து வேட்பாளருக்கு வாழ்த்துகளைத் தெரி வித்தனர்.

## விழுப்புரம் அருகே ரயில் இன்ஜின் தடம் புரண்டதால் பரபரப்பு பாதுகாப்பு படை போலீசார் விசாரணை

விழுப்புரம், ஏப்.9-

விழுப்புரம் அருகே சர்வீஸ் தண்டவாளத்தில் சென்ற ரயில் இன்ஜின் தடம் புரண்டது. இதுதொடர்பாக ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் விசாரித்து வருகின்றனர். விழுப்புரம் அருகே கண்டம்பாக்கம் ரயில் நிலையத்தில் பராமரிப்பு பணிக்கான ரயில் இன்ஜின் நிறுத்தி வைக்கும் யார்டு மற்றும் சர்வீஸ் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி நேற்று விழுப்புரம் ரயில் நிலையத்தில் ரயில் பெட்டிகளை இணைக்கும் ரயில் இன்ஜின், விழுப்புரத்தில் இருந்து கண்டம்பாக்கத்துக்கு சென்றது.

அப்போது சர்வீஸ் தண்டவாளத்தில் பின்பக்கமாக செல்லும்போது எதிர்பாராதவிதமாக கடைசி எல்லை பகுதிக்கு சென்று தண்டவாளத்திலிருந்து கீழே இறங்கி தடம்புரண்டது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. அந்த ரயில் இன்ஜினில், பெட்டிகள் ஏதும் பொறுத்தப்படாத நிலையில், 2 பைலட் மட்டுமே இருந்த நிலையில் இருவரும் காயமின்றி தப்பினர். தொடர்ந்து விழுப்புரம் ரயில் நிலையத்திலிருந்து 20க்கும் மேற்பட்ட ரயில்வே தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றொரு சிறப்பு ரயில் மூலம் அங்கு விரைந்து வந்து தண்டவாள பகுதியை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

சுமார் 2 மணி நேர போராட்டத்துக்கு பிறகு பொக்லைன் இயந்திரம், கிரேன் மூலம் ரயில் இன்ஜின் தண்டவாளத்தில் மீண்டும் தூக்கி வைத்தனர். மெயின் தண்டவாளத்தில் இந்த விபத்து நடந்திருந்தால் காட்பாடி மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து பலமணி நேரம் பாதிக்கப்பட்டிருக்கும் என ரயில்வே அதிகாரிகள் தெரி வித்தனர். இதனிடையே இந்த விபத்து நடந்த பகுதிக்கு ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



■ ஒட்டன்சத்திரத்தில் உலக சுகாதார தினத்தை முன்னிட்டு, இந்திய மருத்துவக் கழகம் சார்பில் நடைபெற்ற விழாவில் சுகாதார விழிப்புணர்வு கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது. இதில் அரசு டாக்டர் பிரியங்கா முதல் பரிசு பெற்றார்.அவருக்கு டாக்டர் அனுராதா பரிசு வழங்கினார். அருகில் செயலாளர் டாக்டர் ஆசைதம்பி, மற்றும் துணைத்தலைவர் டாக்டர் முத்துசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## “பனைத் தொழிலாளி காலில் துப்பாக்கிச் சூடு! அகரக்கட்டு லூர்து நாடார் ஆவேசம்!

தென்காசி ஏப். 9-

ஆலங்குளம் அருகே மருதம்புத்தூரில் பனைத் தொழில் செய்து வரும் மணிகண்டன் என்பவரை, கள் விற்றதாகக் கூறி விசாரணைக்கு அழைத்துச் சென்ற காவல்துறை உதவி ஆய்வாளர், அவரைத் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் தமிழகத்தையே அதிரவைத்துள்ளது.



கள் விற்றதாகச் சந்தேகப்பட்டு மணிகண்டனை காட்டுக்குள் அழைத்துச் சென்ற எஸ்.ஐ இசக்கிராஜா, மணிகண்டனின் தந்தை மற்றும் பெண் உறவினர்களை ஆபாசமாகத் திட்டியதாகக் கூறப்படுகிறது. இதனைத் தட்டிக்கேட்ட மணிகண்டனை எஸ்.ஐ தாக்கியுள்ளார்.

"பெண்களை ஏன் இழிவாகப் பேசுகிறீர்கள்?" என்று கேட்டதற்காக, மணிகண்டனைத் தனது துப்பாக்கியால் எஸ்.ஐ காலில் சுட்டுள்ளார். ரத்த வெள்ளத்தில் துடித்த மணிகண்டன், "பனைத் தொழிலாளியாகப் பிறந்தது பாவமென்றால் என் நெஞ்சிலேயே சுட்டுக் கொன்றுவிடுங்கள்" என கதறியும், மீண்டும் அவர் காலில் சுடப்பட்டதாகத் தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மணிகண்டன் கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார்.

மணிகண்டனைச் சுட்ட எஸ்.ஐ இசக்கிராஜா மற்றும் அவருடன் சென்ற காவலர்கள் மீது உடனடியாகக் கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பனைத் தொழிலாளியின் குடும்பத்திற்குத் தமிழக அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

காவல்துறையின் இத்தகைய அராஜகப் போக்கை அரசு வேடிக்கை பார்க்கக் கூடாது என வலியுறுத்தியுள்ளார்.



■ 918 வாக்குச் சாவடிகள் புதுச்சேரியில் நாளை வாக்குப் பதிவை முன்னிட்டு 918 வாக்குச்சாவடிகளில் 3,845 EVM இயந்திரங்களுக்கு ஏற்பாடு தேர்தல் அலுவலர் குலோத்துங்கன்

## தேமுதிகவில் இருந்து விலகுவதாக மீசை ராஜேந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஏப்.9-

தேமுதிகவில் இருந்து விலகுவதாக மீசை ராஜேந்திரன் அறிவித்துள்ளார். தேமுதிகவில் முக்கிய நிர்வாகிகளில் ஒருவராகவும், விஜயகாந்தித்தின் தீவிர ஆதரவாளருமாக இருந்த மீசை ராஜேந்திரன் அக்கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். கடந்த மூன்று சட்ட சபை தேர்தல்களிலும் போட்டியிட்ட மீசை ராஜேந்திரனுக்கு இந்த தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டதால் அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மீசை ராஜேந்திரன் கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதாவிற்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். கட்சியில் இருந்து தன்னை விடுவிக்குமாறு அந்த கடிதத்தில் கோரியுள்ளார். கேப்டன் மன்றத்தில் 31ஆண்டுகளும், தேமுதிகவில் 21 ஆண்டுகளும் உழைத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார்













SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000